# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

மனு எண் : 0366 / 2017 / ஊராட்சி

ஆணை எண் : 048 / 2017

நாள் : 27/03/2017

திரு. ச. இசக்கிமுத்து,
மேட்டுப்பட்டி, ராமநாதபுரம்,
சிவகிரி தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம். — மனுதாரர்

திரு.காளியப்பன்,
ஊராட்சி மன்ற செயலாளர்,
இராமநாதபுரம் ஊராட்சி. — எதிர்மனுதாரர்

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் பஞ்சாயத்து, மேட்டுப்பட்டியில் வசிக்கும் திரு. ச. இசக்கிமுத்து அவர்களின் 17.03.2017 நாளிட்ட மனுவில் இராமநாதபுரம் பஞ்சாயத்திற்குட்பட்ட மேட்டுப்பட்டி, கோடாங்கிபட்டி, சரவணாபுரம், சண்முகநாதபுரம் ஆகிய ஊர்களில் தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதி, சாக்கடை சுத்தம் செய்தல் போன்ற பணிகள் எதுவுமே சரியாக நடைபெறுவதில்லை என்றும், அதைப்பற்றி புகார் தெரிவித்தாலும் வட்டார வளர்ச்சி அலுவலர் நடவடிக்கை எடுப்பதில்லை என்றும், OHT டேங்க் இரண்டுக்கு பராமரிப்பு பணிகள் நடக்காமல் ரூ.60,000/- எடுக்கப்பட்டுள்ளது என்றும், ஊராட்சிக்குட்பட்ட இடத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பை அகற்றக் கோரியதற்கு ஊராட்சி செயலர் எவ்வித நடவடிக்கையும்

எடுக்கவில்லையென்றும், இதுபோன்று பல்வேறு புகார்கள் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தெரிவித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனத் தெரிவித்து, ஊராட்சி செயலரின் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கவும் வேறு ஊருக்கு மாறுதல் செய்யவும் கோரியுள்ளார்.

2. 2014 –ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7) ன்படி, "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் , "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம், அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/4/2017
செயலாளர்

6/4/17

பெறுநர்
திரு. ச. இசக்கிமுத்து,
6/332, முனியாண்டி கோவில் தெரு,
மேட்டுப்பட்டி, ராமநாதபுரம் (அ) சிவகிரி தாலுகா,
திருநெல்வேலி.

நகல்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி மாவட்டம்,
திருநெல்வேலி. ( இணைப்புடன் )

உதிரி 5